| Headline | English is important for country’s growth | | |
|---|---|---|---|
| Date | 29th Aug 2009 | | |
| Media Title | Tamil Murasu | Section | - |
| Page No. | Pg 1 | Size | N.A. |
| Description | Speaking at the launch of this year’s Speak Good English Movement at LASALLE College of the Arts, Deputy Prime Minister Teo Chee Hean highlights the importance of speaking proper English as a tool for business and social development. | | |

# நாட்டு வளர்ச்சிக்கு ஆங்கிலம் முக்கியம்: துணைப் பிரதமர்

நன்றாக ஆங்கிலம் பேசுவது மூலம் போட்டித்தன்மை மிக்க வர்த்தகத்தில் சிங்கப்பூரர்கள் முன்னணி வகிக்க வேண்டும் என்று துணைப் பிரதமர் டியோ சீ ஹியன் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், சிங்கப்பூரின் பல இன மக்களை ஒன்றிணைக்கும் மொழியாகவும் நாட்டு வளர்ச்சிக்கு முக்கிய கருவியாகவும் ஆங்கிலம் திகழ்ந்து வருவதாக அவர் கூறினார்.

நல்ல ஆங்கிலம் பேசும் இயக்கத்தை லா சால் கலைக் கல்லூரியில் நேற்று அதிகார பூர்வமாக தொடங்கி வைத்து பேசிய துணைப் பிரதமர் டியோ, "அனைத்துலக வர்த்தகங்களில் ஆங்கிலமே அதிகமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

"உலக கூட்டுறவில் இணைய சீனா, கொரியா, தாய்லந்து போன்ற நாடுகள் ஆங்கிலத்தைத் தீவிரமாக கற்று



துணைப் பிரதமர் டியோ சீ ஹியன்

வருகின்றன," என்று ஆங்கிலத்தின் முக்கியத்துவம் பற்றி அவர் தெரிவித்தார்.

அதோடு, நல்ல ஆங்கிலம் பேசுவதால் மட்டுமே, நினைப்பதை மற்றவர்க்குப் புரியும்படி தெளிவாகச் சொல்ல முடியும் என்று தற்காப்பு அமைச்சருமான திரு டியோ குறிப்பிட்டார்.

" இலக்கணப் பிழையின்றி நல்ல சொல்வளம் கொண்டு எளிமையான ஆங்கிலத்தில் கருத்துகளை வெளிப்படுத்த வேண்டும்," என்று நல்ல ஆங்கிலம் பேசுவதற்கான வழிமுறைகளையும் அமைச்சர் டியோ விளக்கினார்.

நல்ல ஆங்கிலம் பேசும் இயக்கம் இவ்வாண்டு தனது பத்தாவது ஆண்டுக்குள் அடி எடுத்து வைக்கிறது.

இந்த இயக்கம் 2000ல் முதன் முதலாக தொடங்கப் பட்டது.

இரண்டாவது முறையாக இந்த இயக்கத்தின் தலைவராக பொறுப்பேற்றுள்ளார் திரு கோ எக் கெங்.

"இணையத்தை அதிகமாகப் பயன்படுத்தும் இளையர்கள் தங்களது நல்ல ஆங்கிலத்தால் மற்ற நாட்டவர்களைக் கவர்வதோடு அவர்களுக்கு சிங்கப்பூரர்கள் மீது நல்ல அபிப்பிராயத்தையும் ஏற்படுத்த ஆங்கிலம் உதவும்," என்று திரு கோ சொன்னார்.

மற்ற நாடுகளைவிட சிங்கப்பூரர்களுக்கு ஆங்கில மொழி சாதகமாக திகழும் என்றும் திரு கோ கூறினார்.